சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு

# விலாசம்

# විලාසම

# Vilasam

2013 டிசம்பர் 10

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு





# எங்கள் இருவரது பெயரும் ஒன்றே

ராமச்சந்திரன் கிருஷ்ணவேனி

அவளுடைய பெயர் ராமையா கிருஷ்ணவேனி. எனது பெயர் ராமச்சித்திரன் கிருஷ்ணவேனி. என்னுடைய தங்கை காசு அனுப்பியிருந்தார். அப்போது அந்தக் கடிதம் மற்ற கிருஷ்ணவேனிக்குக் கிடைத்துவிட்டது. பிறகு நான் லெட்டர் வரவில்லையே வரவில்லையே என ஏங்கிக்கொண்டிருந்தேன். பிறகு லெட்டரைக் கொண்டு போய் டீச்சரிடம் கொடுத்திருந்தார்கள்.

# இலக்கம் ஓர் அவமரியாதை

எம். அனில்ராஜ்

எனது பெயர் எம். அனில்ராஜ். நான் ஆகரதன்னை தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றேன். எமது லயத்தின் இலக்கம் 15. எமக்கு எப்போதும் கடிதம் வரும் போது லயத்தின் இலக்கத்திற்கே வரும். உதாரணமாக: எம். ஆறுமுகம், லயம் 15, யூறு குரூப், பசறை. என்றே கடிதம் வருகிறது. இவ்வாறு இருப்பது எங்களுக்கு மிகவும் அவமறியாதையாக உள்ளது. எனவே ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு இலக்கம் கொடுத்து தனித்தனியான முகவரி கிடைத்தால் எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும்.




CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

SPONSORED BY

AUSTRALIA

ஊவா சக்தி நிறுவனம்
ඌව ශක්ති පදනම
Uva Shakthi Foundation

"விலாசம்" என்பது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் வெளியீடாகும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக அரசாங்கம், முரண்பாடுகளைத் தீர்த்தல் அதனுடன் இணைந்த முரண்பாடுகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும் 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்களின் கொள்கை விமர்சன ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

"விலாசம்" பிரசுரம், இலங்கையில் மோதல்களைத் தீர்ப்பதற்கு ஏற்புடைய பிரச்சினைகளைப் பற்றி, எமது சமாதானம் மற்றும் மோதல் பகுப்பாய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் பொது மக்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தும் ஒரு மார்க்கமாகும். இவ்வெளியீட்டின் கருத்துக்கள் கட்டாயமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினதோ அல்லது அதன் பணிப்பாளர் சபையினதோ கருத்துக்களை பிரதிபலிக்கமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.

பதிப்பாசிரியர் "விலாசம்"
மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், 24/2, 28வது ஒழுங்கை, மலர் வீதி, கொழும்பு -7, இலங்கை
தொலைபேசி: 94-11-2370801/06 ஃபக்ஸ் : 94-11-2370802 மின்னஞ்சல்: cpa@cpalanka.org இணையதளம்: www.cpalanka.org



# விலாசம்
# විලාසම

## தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிரந்தர முகவரி வழங்கும் சமூக செயற்பாடு

2013 ஜூலை 17 - 19 வரை

செயலமர்வு

**பசறை**

பக்க வடிவமைப்பு : வாக்யா றூ தொ.பே: 011-2708377
புகைப்படங்கள் : சுரேஷ் பிரசன்ன தொ.பே: 072-6983982
அச்சுப் பதிப்பு : க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ் தொ.பே: 0777-315971

### முகவரி அற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர முகவரி

இக்கருத்திட்டத்திற்காக பசறை பிரதேச சபை பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டது. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் ஊவ சக்தி நிறுவனத்தினால் கருத்திட்டம் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தப்பட்டது. கிட்டத்தட்ட 3000 பேர் இக்கருத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். ஒரு பரீட்சார்த்த கருத்திட்டமாக இதன் வெற்றி அகில இலங்கை ரீதியாக பொது மக்களின் பங்களிப்பு உறுதுணையாக அமையும். பசறை பிரதேச சபை, பசறை பிரதேசச் செயலகம், பசறை பிரதேசத்திற்கு ஏற்புடைய பிரிவுகளின் கிராம அலுவலகப் பிரிவுகள், பசறை பொலிஸ் நிலையம் உட்பட பல நிறுவனங்கள் இங்கு பங்காளர்களாக செயற்பட்டனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான முகவரிகளை உறுதிப்படுத்துதல் மேற்படி முகவரிகளுக்குரிய சாதாரண தபால் முறையின் கீழ் இக்கடிதங்களைப் பெறுவதற்கு வகை செய்தல் இதன் இலக்காகும்.




# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாத்தல் பற்றிய கருத்திட்டம் – 2013

### அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுகிறது

இலங்கைத் தேயிலை என்ற பெயரில் பல கோடி டொலர்கள் பெறுமதியான தேயிலைத் தொழில் இவர்களுடைய உழைப்பின் மூலமே உயிர்பெற்றது. ஆனால் பதுளை மாவட்டத்தின் பெருந்தோட்டத் துறையின் தொழிலாளர்கள் இலங்கையின் மிகவும் வறுமைக்குட்படுத்தப்பட்ட மிகவும் பாரபட்சத்திற்குள்ளான மக்கள் குழுவினராவர். இலாபகரமான உழைப்பின் மீது தமது ஆதிக்கத்தைக் கைவிட விரும்பாத சமூகப் பொருளாதார முறைமை மூலம் போஷிக்கப்பட்ட ஊவா மாகாணத்தின் தோட்டத் தொழிலாளர்களின் நிலமை இலங்கையில் அண்மைக்கால யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி மூலம் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு தாக்கமும் இல்லாதது போல் தோன்றுகிறது. இச் சமூகத்தின் மீது நிர்வாக கவனிப்பின்மை தமது பெயரால் முகவரி கூட இல்லாத ஒரு நிலமையே காணப்படுகிறது.

அநேகமான லயன் காம்பராக்களுக்கு இலக்கம் கூடக் கிடையாது, ஒரே பெயருடையவர்களின் பெயர்களுக்குப் பதிலாக வேறு நபர்களுக்கு தவறுதலாக கடிதம் விநியோகிக்கப்படுகிறது. ஒருவருக்கு கடிதம் கிடைக்கிறதா இல்லையா என்பது அனேகமாகக் கங்காணி மீதே தங்கியுள்ளது (கடிதங்கள் விநியோகித்தலுக்குப் பொறுப்பான தோட்டத் தொழிலாளர்கள் குழுவினரின் மேற்பார்வையாளர்கள், பதவி வகிப்போர்) அவர்களுடைய நேர்மை மீதும் அயலவர்களுடைய நல்லெண்ணம் மீதும் (இவை அநேகமாக இவை நிலவாமையாகும். அல்லது வெறுமனே எழுந்தமானதாகும்.

இக்கருத்திட்டத்தின் மூலம் அணுகும் மற்றுமொரு பிரச்சினையான தேசிய அடையாள அட்டைகள் இன்றி அநேகமான நெருக்கடி நிலைகள் உருவாகியுள்ளன. பயணிக்கும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்ட, பல்வேறு கொடுக்கல் வாங்கல் கடினமான சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளின் போது பாதகமான நிலமை உருவாகின்றது. பாதுகாப்பற்ற நிலை, உத்தியோகபூர்வமான ஆவணங்களை பெறுவது கடினமாகும். தொழிலைத் தேடுவது கடினமாகிறது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது பிரதேசப் பங்காளர் அமைப்பான "ஊவ சக்தி நிறுவனத்தோடு ஒன்றிணைந்து ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பசறையில் இது பற்றிய முன்னோடி கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. தமது மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படும். பாரபட்சத்திற்கு உள்ளாக்கப்படும் சமூக வாழ்விற்கு தனிநபர்களுக்கு உரித்தான சொற்ப அபிமானத்தைப் பெற்றுக்கொடுப்பது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இலங்கையின் பெருந்தோட்ட வரலாற்றில் முதல் முறையாக 3000 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிரந்தர முகவரியை வழங்கும் நடவடிக்கைகள் கடந்த 6 மாதங்களுக்குள் இக்கருத்திட்டம் மூலம் அமுலாக்கப்பட்டுள்ளது. கடிதங்களையும் ஆவணங்களையும் பாதுகாப்பாக விநியோகிப்பதற்காக 20 பிரதேசங்களில் தபால் சேகரிக்கும் பெட்டிகள் அமைக்கப்பட்டன. தோட்டங்களில் 40 இடைநேர் மார்க்கங்களுக்கு தகுதியான பெயர்கள் கலந்துரையாடப்பட்டு பெயர் பலகைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முந்நூறு அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்களை துரிதமாக அனுப்புவதற்கு நடமாடும் செயற்திட்டம் இடம்பெற்றது. இவை அமுல்படுத்தப்படாமல் இருந்திருந்தால் அதன் உரிமையாளர்களுக்கான அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுவது தாமதமாகியிருக்கும் அல்லது அவை கிடைக்காமலேயே போயிருக்கும் இந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பரீட்சைகளுக்கு தோற்ற இருக்கும் பல மாணவ மாணவியருக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்பாகக் கடிதங்களைப் பெறுவது ஒரு சாதாரண விடயமாகும். ஆனால் பெருந்தோட்டத் துறையில் இது மிக கஷ்டமானதும் நிலையற்றதுமாக அமைந்தது. மிக அபூர்வமாகக் கிடைக்கக்கூடிய பல்கலைக் கழகப் பிரவேசத்திற்கான வாய்ப்பு, கொழும்பில் ஒரு வேலை வாய்ப்பு, வெளிநாட்டிலுள்ள தமது உறவினர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெறும் பணம் என்பவை இடம்பெறுகிறதா இல்லையா என்பது பற்றி அவர்களுடைய வாழ்க்கையில் தீர்க்கமானவையாக அமையும் சந்தர்ப்பங்கள் மிக அதிகம். தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் உறுப்பினர்களுக்கு இது மிக அருமையான சந்தர்ப்பம் ஆகும். அதே சமயம் அவர்களுடைய வாழ்நாளில் ஒரு முறை அல்லது இரு முறை மாத்திரமே இச்சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டுகிறது. இது நம்பிக்கை பின்னடைவு ஆகிய இரண்டுக்கும் இடையிலான ஒரு வித்தியாசம் எனக் கூறினால் தவறில்லை.

விலாசம்
විලාසම



# அடையாளத்திற்கு மதிப்பளித்தல்

லயனல் குருகே
சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் முதல்வர்



தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பைச் செய்து தேயிலைத் தொழிலுக்கு உயிர் கொடுக்கும் விசேட சமூகத்தைச் சார்ந்தவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். அவர்கள் மக்களால் போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் பிரித்தானிய காலனித்துவ வாதிகளால் பெருந்தோட்டத் துறைக்கு அவசியமான உழைப்பாளர் படையை உருவாக்கும் நோக்குடன் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு இவர்கள் வரவழைக்கப்பட்டது முதல் இன்றுவரை அவர்களுடைய வாழ்க்கை மிக மிகக் கஷ்டமானதாகும். இந்நிலையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும் உள்நாட்டு ஆட்சியாளர்களும் வழிவகுக்கவில்லை. எனவே அவர்கள் இன்றும் சுகாதார வசதியற்ற மிகவும் மோசமான சுற்றாடலில் லயன் காம்பறாக்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வி வசதிகள் மிக மட்டுப்படுத்தப்பட்டவை. அவர்கள் வைத்திய சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு செல்வதாக இருந்தாலும் அது மிகவும் கஷ்டமான பயணமாகும். இத்தொழிலாளர்களுக்கு தினசரி சம்பளமே வழங்கப்படும். நாளாந்த சம்பளம் பெறும் இத் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி நன்மைகள் கூட கிடைப்பதில்லை. தோட்டங்களின் வருமானம் குறைந்துள்ளதாகக் கூறி இவ்வாறு தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எனினும் அவர்களுடைய சம்பளத்தில் இருந்து தவணைக் கட்டணங்கள் அறவிக்கப்படுகின்றன.

இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் கிடைக்கும் தபால் சேவை தோட்டத் தொழிலாளர்களுக்கு மிக மந்த கதியிலேயே கிடைக்கின்றது. அல்லது கிடைப்பதே இல்லை. எனவே அரச பரீட்சைகள், நேர்காணல்கள் ஆகிய மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் கூட அவர்கள் அவற்றை இழக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட திகதியின் பின்னர் தாமதமடைந்தே உரிய கடிதங்கள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. இது மிகவும் கவலைக்கிடமான ஒரு நிலைமையாகும். சம உரிமை கொண்ட பிரஜைகள் என்ற வகையில் அவர்களுக்கான அங்கீகாரம் அரசியலமைப்பிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

30 ஆண்டுகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைகளின் 9.200 பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தோட்டப் பிரதேசங்களில் கல்வி, சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைப் பிரச்சினைகள் என்பன பற்றி அவர்கள் ஆணைக்குழு முன்னே கருத்துத் தெரிவித்தனர். வசதிகளையும் இதனை விட சிறந்த வாழ்க்கை நிலைமைகளையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்தது. ஆகவே இவ் வசதிகளை வழங்குவது தேசிய கடமையாகும். அவர்களின் அடையாளத்திற்கு மதிப்பளிப்போம்.





# விலாசம்
# විලාසම

## வழி முறை

தோட்டத் தொழிலாளர்களுக்கு விலாசத்தைத் தயாரித்து அவர்களின் மதிப்பை மேலோங்கச் செய்ய வேண்டும். என்ற முன் மொழிவு, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவு முன்வைத்தது. ஊவ சக்தி நிறுவனம் இதனை அமுல்படுத்துவதற்கு தமது அதி உயர் ஒத்துழைப்பை வழங்கி அதனை கூட்டிணைத்தது. முதலாம் கட்டத்தின் போது பசறை பிரதேசத்தின் பல தோட்டப் பிரிவுகளில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வீட்டுரிமையாளர்களைக் கண்டு கலந்துரையாடி அவர்களுடைய கருத்துக்களையும் அபிலாஷைகளையும் புரிந்துகொள்வதற்கு முயற்சித்தது. இது மிகவும் பிரயோசனமாக அமைந்ததோடு பிரச்சினைகளை அடையாளம் காணவும் உதவியது.

அதன் பின்னர் சுமார் 50 குடும்பங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் மக்கள் குழுக்களுக்கு தலைமை தாங்கும் நடவடிக்கைக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறாக உருவாக்கப்பட்ட 40 குழுக்களுக்காக முறையான பயிற்சி வழங்கப்பட்டது. அடுத்த கட்டத்தின் நடவடிக்கைகள் இவ்வாறாக அமைந்தது.

தோட்டங்களின் தெருக்களையும் முகவரிகளையும் அடையாளம் காண்பதற்காக பங்கேற்பு ரீதியான வழிமுறை பின்பற்றப்பட்டது.

லயன் காம்பராக்களை அடையாளம் காண்பதற்காக பயன்படுத்தப்பட்ட சில வழிமுறைகள் அவர்களை மேலும் ஓரம் கட்டுவதற்கே காரணமாக அமைந்தது. இது கல்வி கற்கும் பிள்ளைகளின் பின்னடைவிற்கும் அவர்களது சுயமரியாதைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.



ஓடுகளால் வேயப்பட்ட லயன் காம்பராக்கள், இழுக் செடிகளால் வேயப்பட்ட லயன் காம்பறாக்கள் என்ற பெயர்களுக்குப் பதிலாக புதிய பெயர்கள் முன்மொழியப்பட்டன. அதுவரை பயன்டுத்தப்பட்ட சில தகுதியான பெயர்கள் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறாக அடையாளம் காணப்பட்ட தெருக்களின் பெயர்கள் பிரதேச சபையினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. பசறை தபால் நிலையம், பிரதேச சபை, பொலிஸ் நிலையம் பிரதேசச் செயலகம், பாடசாலைகள் மற்றும் கிராம அலுவலர்கள் இவ்விடயத்தில் மிகக் கூடிய ஒத்துழைப்பை வழங்கினர். இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பல்வேறு வகைகளிலும் உதவினர். நீண்டகாலமாக தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கிய ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக தமது வீட்டுக்கு ஒரு இலக்கமும், சரியான முகவரியும் வீதியின் பெயரும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டது.

அதே சமயம் இதுவரை அடையாள அட்டை வழங்கப்படாத சுமார் 300 இற்கும் அதிகமானோருக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு இடையீடு செய்தல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நடவடிக்கையாகும்.

மூன்று ஆண்டு காலத்திற்குள் சகல அடையாள அட்டைகளிலும் மும்மொழிகளும் இடம்பெற வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை அமுல்படுத்தும் வகையில் புதிய அடையாள அட்டைகளைப் பெறும் எதிர்பார்ப்புடன் அவர்கள் வாழ்கின்றனர்.



# காலத்திற்கு உசிதமானது

பசறை, கித்துல்கல டிவிஷன், தபால் அதிபரின் கதை



தோட்டத்தால் நியமிக்கப்பட்ட தபால் ஊழியர் தோட்டத்திற்கான தபால் பையை கொண்டு போவார். அதற்கு விசேட கட்டணமாக வருடாந்தம் புத்தகக் கட்டணம் அறவிடப்படுகிறது. தோட்டத்திற்கு தபாலில் வரும் சகல கடிதங்களும் அப்புத்தகத்தில் பதியப்படும். பதிவுத் தபால்கள் தவிர்ந்த சகல சாதாரண கடிதங்களும் ஒரு பையில் போட்டு தோட்டத்திலுள்ள முகாமையாளருக்கு வழங்கப்படும். அங்கு தபால் பட்டுவாடா அவ்வளவு திருப்திகரமாக இல்லை.

ஆனால் கடிதங்கள் விநியோகிப்பது திருப்திகரமாக அமையவில்லை. தோட்டத்தின் தலைமை அலுவலகத்தில் தபால் பை திறக்கப்படும். அந்தந்த டிவிஷ ன்களுக்கு கடிதங்கள் வகைப்படுத்தப்பட்டு செக் ரோலை எடுத்துச் செல்லும் நபரின் கையில் கடிதங்கள் கொடுத்து அனுப்பப்படும். தொழிலாளர்களின் பெரட்டுவில் கள உத்தியோகத்தர் கடிதங்களை உரியவர்களிடம் ஒப்படைப்பார். இது வெற்றிகரமான நடைமுறை அல்ல. உரியவர்களின் கையில் கடிதம் போய் சேராத சந்தர்ப்பங்களும் உண்டு. குறிப்பிட்ட நபர் பெரட்டுவிற்கு வராவிட்டால் அவரின் கடிதம் வழங்கப்படமாட்டாது.

பதிவுத் தபாற் கடிதங்கள் தொடர்பாக ஓர் அறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படும். ஆனால் அவற்றை அவர்கள் காண்பது குறைவு. எனவே பதிவு செய்யப்பட்ட கடிதங்களில் 200 அல்லது 300 கடிதங்கள் எம்மிடம் சேர்ந்து இருக்கும்

நாம் மீண்டும் மீண்டும் அறிவித்தல்களை வெளியிடுவோம். நாம் மனிதத் தன்மையோடு கடிதங்களை மாதக் கணக்கில் பாதுகாப்பாக வைத்திருப்போம். ஆனால் அவ்வாறு வைத்திருப்பதற்கு எமக்கு அதிகாரம் இல்லை.

அதன் பின்னர் கடிதங்கள் திருப்பி அனுப்பப்படும்.

ஒரே பெயர் இருக்கின்ற காரணத்தினாலும் விலாசம் ஒழுங்காக வெளியிடப்படாத காரணத்தினாலும் நாம் ஏச்சு வாங்கும் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு.

தபாற் கட்டளைகளை வேறு நபர்கள் பணமாக்கிக் கொண்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு.

எனவே ஒவ்வொரு தொழிலாளிக்கும் தனது அடையாளத்தை உறுதி செய்யக்கூடிய வகையில் சரியான விலாசத்தைத் தயாரிப்பது காலத்திற்கு உசிதமானது.







# பிள்ளைகளுக்குப் பெரிய நிவாரணம்

பீ. ஆறுமுகம் - அதிபர்
பசறை தமிழ் தேசிய பாடசாலை

பிள்ளைகளை பல்கலைக் கழகத்திற்கு சேர்ப்பதற்கு கடிதங்கள் வருகின்றன. தொழில் வாய்ப்புக்களுக்காகவும் பல்கலைக்கழகப் பீடங்களுக்கும் நேர்காணல் செய்வதற்கும் கடிதங்கள் வருகின்றன. மற்றவர்களை விட தாமதித்தே இங்குள்ள பிள்ளைகளுக்கு கடிதங்கள் வருகின்றன. தோட்ட அலுவலகத்திற்கு ஒரு பியோன் சென்று இவற்றைக் கொண்டு வருவார். பிறகு யாரிடமாவது கொடுத்து இக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும். நான் தோட்டத்தில் வாழ்ந்த போதும் நிலமை இப்படியே இருந்தது. நான் அறிந்த மட்டில் அந்த நிலைமையில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. ஒன்று நேரத்திற்கு கடிதம் கிடைப்பதில்லை. சேர் நாளைக்கு ஒரு நேர்முகப் பரீட்சை இருக்கிறது, சான்றிதழ்கள் தேவை" எனச் சில பிள்ளைகள் வந்து சொல்வார்கள். அண்மையில் ஒரு மாத காலம் நான் லீவில் போயிருந்தேன். நான் பாடசாலைக்கு வந்த போது மூன்று பிள்ளைகள் வந்தார்கள். வவுனியாவில் நேர்முகப் பரீட்சை இடம்பெறுகிறதாம். ஞாயிற்றுக்கிழமை இங்கிருந்து புறப்பட வேண்டும். சனிக்கிழமை மாலை தான் கடிதம் கிடைத்திருக்கிறது. சனிக்கிழமை இரவு எனது குவாட்டஸிற்கு வந்து கடிதம் கேட்டார்கள். நான் குவாட்டஸில் வசிப்பதால் அவர்களுக்குத் தேவையான ஆவணங்களைக் கொடுத்தேன். அவர்கள் வவுனியாவுக்குப் போய் நேர்காணலில் பங்குபற்றினார்கள்.



ஆனால், இரவு நேரத்தில் இப்பிள்ளைகள் இங்கு வருகிற போது த்ரீவீலர்களை எடுத்துக்கொண்டு செலவு செய்து இங்கு வரவேண்டும். கஷ்டப்பட வேண்டும். இரவு வேளைகளில் பஸ் வண்டிகள் கிடையாது. ஆனால் டவுனில் உள்ள பிள்ளைகளுக்கு அப்படிப் பிரச்சினை கிடையாது. அவர்களுக்கு வெள்ளிக்கிழமையே கடிதங்கள் கிடைத்திருந்தன. வெள்ளிக்கிழமை பாடசாலை நேரத்திலேயே அவர்கள் கடிதங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் தோட்டத்தில் வாழும் பிள்ளைகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது மாபெரும் அநீதி. மொனராகலைப் பிரதேசத்தில் மிகத்தூரத்தில் வாழும் பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு கடிதங்கள் வந்து சேர்கின்றன. அந்தக் கடிதம் அந்த மாணவர்களோடு சண்டைபிடித்த வேறு நபர்களின் கைகளில் கிடைத்துள்ளன. தோட்டத்திலுள்ள துரைமார் அவர்களுக்கிடையில்





# விலாசம் විලාසම




ஒரு பிணக்கு இருப்பதை அறியாமல் அக்கடிதத்தை கொடுத்துள்ளனர். கடிதத்தைப் பெற்றவர் அதை தூர எறிந்துள்ளார். நீண்டநாட்களுக்குப் பிறகு தான் இப்படியான ஒரு கடிதம் வந்ததாகவும் தான் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டதாகவும், அந்த மாணவன் அறிகின்றான். அந்த மாணவன் தற்போது ஆசிரியர். அவருடைய பெயரையும் நான் கூற முடியும். எனவே இவ்வாறாக பல்கலைக்கழகம் செல்வதற்கு இருந்த சந்தர்ப்பத்தை இழந்த பல மாணவர்கள் இங்கு இருக்கிறார்கள்.

ஒரே பெயரில் இரண்டு மூன்று பேர் தோட்டங்களில் வாழ்கின்றார்கள். இந்தக் கடிதங்களை மாறிக் கொடுத்துவிட்டால் அவற்றை மற்றவர்கள் உடைத்துப் பார்ப்பார்கள் கடிதம் உடைத்த பின்பு தான் அது தமக்குச் சொந்தமானது இல்லை என்பதை அவர்கள் அறிவார்கள். அப்போது அக்கடிதத்தை உரியவரிடம் சேர்க்க முற்படும் போது இருவருக்கும் இடையில் பிணக்கு ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்கு அந்தக் கடிதம் குப்பையில் எறியப்படுகிறது. அல்லது கிழிக்கப்படுகிறது.

பதிவுத் தபால் கடிதங்கள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படுவது இல்லை. தோட்டங்களுக்குச் சென்று கடிதம் உரியவர்களுக்கு பட்டுவாடா செய்யப்படுவதுமில்லை. தோட்டத்தில் பணிபுரியும் சிற்றூழியர் வசம் பதிவுத் தபால் ஒப்படைக்கப்படுவதும் இல்லை. பார்சல்களைப் பொறுத்த வரையில் நிலமை அப்படித் தான். சாதாரன தபாலில் அனுப்பப்படும் கடிதங்கள் மாத்திரமே பியோனிடம் ஒப்படைக்கப்படுகிறது. தோட்டத் துறைக்கு வரும் பதிவுத் தபால் மாத்திரம் அவரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

தோட்ட முகாமைத்துவத்திடம் தான் கடிதங்கள் ஒப்படைக்கப்படும். ஏனெனில் அவர் தோட்ட முகாமையாளரின் பிரதிநிதி என்ற வகையில். அவ்வாறாயின் பதிவுத் தபால் பார்சல்கள் என்பன இருந்தால் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் (3 நாட்கள் அல்லது 7 நாட்களுக்கு முன்னர்) வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு ஒரு சிறு துண்டு மூலம் அறிவிக்கப்படும். இக்காலகட்டத்திற்குள் பதிவுத் தபாலுக்கு உரியவர் லீவு போட்டு பணத்தையும் செலவு செய்து டவுனுக்குப் போய் பதிவுத் தபாலை எடுத்து வர வேண்டும். நாளாந்தச் சம்பளத்திற்கு தொழில் செய்வோருக்கு இப்படியான பெரும் நஷ்டத்தை அனுபவிக்க வேண்டும். இலங்கையின் ஏனைய பிரஜைகளுக்கு பதிவுத் தபால் வீட்டுக்கே எடுத்துச் சென்று பட்டுவாடா செய்யப்படுகையில் தோட்டத்தில் வாழும் மக்களுக்கு தபாற் கந்தோருக்கு வந்து அக்கடிதத்தை எடுக்குமாறு ஒரு சிறு துண்டு அனுப்பப்படுகின்றது. தபால் கந்தோருக்குப் போகும் போது பதிவுத் தபாலை ஒப்படைக்கும் அதிகாரி சில சமயம் தபால் கந்தோரில் இருக்கமாட்டார். இப்பதிவுத் தபாலை உரியவரிடம் ஒப்படைப்பதற்கு அவரது அடையாள அட்டையும் ஏற்கனவே அனுப்பப்பட்ட சிறு துண்டு அறிவித்தலும் இருக்க வேண்டும். இந்த இரண்டு ஆவணங்களும் எடுத்துச் சென்றால் மாத்திரமே பதிவுத் தபால் உரியவரிடம் ஒப்படைக்கப்படும்.





විලාසම
விலாசம்

# அவர்களுடைய உரிமை மீறப்படுகிறது

**தயாலன் - கடிதங்களை விநியோகிப்பவரின் கதை**

ஒரே இனிஷியலில் (முதல் எழுத்து கொண்ட) 4 பேர் இருக்கிறார்கள். அந்த 4 பேரின் கடிதங்களையும் கொடுக்கப் போகும் போது வீட்டு இலக்கமும் இருப்பதில்லை. நான் இக்கடிதங்களை ஒவ்வொருவரிடமும் காட்டிக் கேட்பேன். அவ்வாறு 4 பேரிடம் கேட்கும் போது அந்த 4 பேரும் சில வேளைகளில் அவருக்கா, இவருக்கா என்ற சந்தேக நிலைமைக்கு வருவார்கள். அவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்த நால்வரையும் காரியாலயத்திற்கு வரச்சொல்வார்கள். பின்பு போஸ்ட் மாஸ்டர் முன்பாக அக்கடிதத்தை பிரித்து அவர் மூலமாகத் தான் இப்பிரச்சினை தீர்க்கப்படுகிறது. இது ஒரு பெரிய குறைபாடாக இவர்களுக்கு உள்ளது. ஏனெனில் தபால்காரர் வீட்டுக்கு கொண்டு வந்து கொடுத்தும், பிறகு அதை உறுதி செய்வதற்காக பஸ்ஸூக்கு காசு செலவழித்துக்கொண்டு தபால் கந்தோருக்குச் சென்று அக்கடிதத்தை வாங்க வேண்டிய நிலைமையே உள்ளது.



பீ. ராஜேந்திரன் என இரண்டு பேர் உள்ளனர். அவர்களுக்கு கோலேஜ் இன்டர்வியூக்கு அழைத்து அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தை ஒப்படைப்பதற்கு காரியாலயத்திற்கு அழைத்து, அவர்களுடைய வழக்கைத் தீர்த்து, அக்கடிதத்தை அவரிடம் ஒப்படைப்பதற்கு பின்னேரம் 4 மணியாகிவிட்டது. அவ்வாறு கடிதம் கிடைத்த போதும் அவரை மறுநாள் காலை 10.00 மணிக்கே இன்டர்வியூவுக்கு அழைத்துள்ளனர். அவர் போக வேண்டிய இடம் அம்பாறை. எனவே அவர் பெரும் சிரமத்திற்கு ஆளாகிவிட்டார்.

பெரிய பொதிகளாக ஏராளமான காசோலைகள் வருகின்றன. இதன் போதும் அதே பிரச்சினை தான் ஏற்படுகிறது. வீட்டு இலக்கங்கள் இல்லாமல் அவற்றை ஒப்படைப்பதில் பெரும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அந்தக் காசோலைகள் எல்லாவற்றையும் நாங்கள் காரியாலயத்தில் தான் ஒப்படைக்க வேண்டியுள்ளது. ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு வரும் ஒரு காசோலையை ஒரு காரியாலயத்தில் பிரித்து ஈ.பீ.எஃப். நம்பர் மூலமாக பார்த்துத் தான் ஒவ்வொருவருக்கும் அக்கடிதங்களை ஒப்படைக்கின்றார்கள். இது ஒரு பாரதூரமான பிரச்சினை. பாதுகாப்புக் கருதி இவ்வாறு செய்த போதும், தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமை இல்லாமல் போகிறது. எனவே சரியான முறையில் அவர்களுக்கு அக்கடிதங்களை கொடுக்க முடியாத நிலைமையே உள்ளது.



இலெக்ஷன் கார்டும் எங்களூடாகத் தான் கொடுக்கப்படுகிறது. நாங்கள் அவற்றை தோட்டத்தில் உள்ள பிள்ளை மடுவம் மற்றும் காரியாலயம் போன்ற பொதுவான இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு எல்லோரையும் வரவழைத்து, ஒவ்வொருவராக அழைத்து அவர்களின் பெயர், இனிஷியல் மற்றைய ஆவணங்களும் சரியாக இருக்கிறதா என்பதை உறுதி செய்து, அவை சரியாக இருந்தால் தான் இலெக்ஷன் கார்ட்டை வழங்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது



# முறைப்பாடுகளை விசாரணை செய்வது இலகுவானதாக அமையும்

மடுல்சீமை பொலிஸ் பொறுப்பதிகாரி



அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு எவருக்குமே நிரந்தரமான விலாசம் கிடையாது மேல் டிவிஷன் கீழ் டிவிஷன், ஸ்ரோர் பகுதி, என்ற வகையிலேயே விலாசங்கள் அமைந்துள்ளன. ஒரே பகுதியில் ஒரே பெயரைக் கொண்ட பலர் இருக்கின்றார்கள். பலர் வாழ்கின்றார்கள். குடிபோதையில் சண்டை பிடித்த பல முறைப்பாடுகள் எங்களுக்கு வரும். ஆனால் எங்களால் சரியாகக் அவர்களின் அடையாளத்தைக் காண முடியாது. இப்படியான முறைப்பாடுகள் கிடைக்கும் போது குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று முறைப்பாடுகளை விசாரணை செய்யுமாறு நான் பொலிஸாருக்கு கட்டளையிடுவேன். உதாரணமாக ராஜேந்திரன் என்ற பெயரில் இரண்டு மூன்று பேர் இருப்பார்கள்.

உண்மையாக அடித்த ராஜேந்திரன் யார் என நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எம்மால் உரிய நபரை தேடிக்கொள்ள முடியாவிட்டால் உங்களை யார் அடித்தது என அடிபட்டவரிடம் விசாரித்து அடையாளங்களை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த இடத்தில் வசிக்கும் இராஜேந்திரன் தான் அடித்தார் எனக் கூறினால் அவரைத் தேடிச் செல்ல வேண்டும். எனவே இவ்வாறாக தோட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளின் அடையாளங்களை தனித்தனியாக அடையாளம் கண்டால் மாத்திரமே பொலிஸாரினால் நியாயத்தை நிலைநாட்ட முடியும்.

ஒரு நாள் ஒரு முறைப்பாடு வந்தது. அதை விசாரணை செய்த போது சிவலிங்கத்தின் மனைவி அடித்தார் என ராஜேந்திரனின் மனைவி ஒரு முறைப்பாட்டைச் செய்தார். அம்முறைப்பாட்டை விசாரணை செய்த போது, ராஜேந்திரனும், அவருடைய மனைவியும் சிவலிங்கமும் வந்து சமாதானமடைந்தனர். பிறகு பார்த்த போது இது தான் நடந்திருக்கிறது. முறைப்பாட்டைச் செய்த முறைப்பாட்டாளரின் பெயரும் அடித்தவருடைய மனைவியின் பெயரும் ஒன்றாகும். இவர் தான் என்னுடைய கணவர் என பொலிஸுக்கு வந்து சமாதானமடைந்தனர். பின்னர் முறைப்பாட்டைச் செய்தவர் வந்து எம்மிடம் கேட்டார். “நான் இல்லாமல் நீங்கள் எப்படி சமாதானமடைந்தீர்கள்” ஒருவரும் இல்லாமல் முறைப்பாட்டை எப்படி விசாரணை செய்தீர்கள். ஏன் அப்படி செய்தீர்கள் சேர்.” பின்னர், மீண்டும் பிரதிவாதியுடன் சென்று முறைப்பாட்டாளரை தேடிவந்து முறைப்பாட்டை விசாரணை செய்ய நேர்ந்தது. இவ்வாறாக பல சம்பவங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு தோட்டத்தில் ஒரு நபருக்கு ஒரு முறைப்பாடு சம்பந்தமாக பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு ஒரு செய்தியை அனுப்பினேன். அதன் பின்னர் ஒரே பெயருடைய 3 பேர் இருப்பதாகவும் பொலிஸார் எனக்கு அறிவித்திருந்தனர். அந்த மூன்று பேரும். திருமணமானவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படியானால் இந்தப் பெண்ணின் கணவன் யார்? மேல் டிவிஷன் ராஜேந்திரன் என்று கூறினார்கள். மேல் டிவிஷன் என்று சொன்னால் அங்கு அதே பெயரில் பலர் இருக்கின்றார்கள். இதை மேலும் ஆராய்ந்த போது அந்தப் பகுதியில் இராஜேந்திரன் என்ற பெயருடைய 4, 5 பேர் இருந்தனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் அடிபட்ட நபர் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பும் வரை நாம் காத்திருக்க வேண்டும்.

நாம் முறைப்பாட்டைச் சீராக விசாரணை செய்யவோ குற்றவாளியை கைது செய்யவோ முடியாது. ஆகவே அடிபட்டவர் திரும்பி வரும்வரை நாம் விசாரணையை முடிக்கவும் முடியாது.





# எனது பெயரைக் கொண்ட எத்தனை பேர் இருக்கிறார்கள்

கே. மணிமாறன் (தோட்டத்தில் வசிப்பவர்)



எனது பெயர் கே. மணிமாறன். அதே போல் இன்னொருவர் இருக்கிறார், அவரது பெயரும் கே. மணிமாறன் தான். அவருடைய வீட்டார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். அச்சமயம் பொலிஸார் மணிமாறனைத் தேடி வந்துள்ளனர். எனது பெயரும் மணிமாறன் என்பதால் முதலில் என்னைத் தேடி வந்தார்கள். அவ்வாறு தேடி வரும் போது அநேகமானவர்களிடம் கேட்டிருக்கிறார்கள். இவ்வாறாக கே. மணிமாறன் என்பவரைத் தேடுகிறோம், அவரது குடும்பத்தில் பிரச்சினை என எங்களுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது என்று பொலிசார் கூறியுள்ளனர்.

மணிமாறன் என்பவரைத் தேடி வரும் போது, நான் மலையில் வேலை செய்து கொண்டிருந்தேன். எனவே மலைக்கு தேடி வரும் வழியில் இரண்டு மூன்று பேரிடம் விசாரித்துள்ளார்கள். பிறகு வேலை செய்யும் இடத்தில் எல்லோரும் என்னிடம் கேட்டார்கள், இவ்வாறு உங்களைத் தேடி வந்தார்கள் என்ன வீட்டில் ஏதும் சண்டையா என விசாரித்தார்கள். அதற்கு நான் இல்லை என்றேன். பிறகு தேடிப் பார்க்கும் போது இன்னொரு மணிமாறன் இருக்கிறார் எனத் தெரியவந்தது. இவ்வாறாக பல தடவைகள் என்னைத் தேடி வந்துள்ளனர். என்னை பொலிஸுக்கு ஒரு நாளும் கொண்டு செல்லவில்லை, எனினும் ஊருக்குள் தேடும் போது எனக்கு அது அவமானமாக இருக்கிறது. என்னைப் பற்றி பலரிடம் விசாரிக்கும் போது, பாடசாலை ஆசிரியர்களிடம் விசாரிக்கும் போது, அவர்களும் என்னிடம் வந்து வீட்டில் என்ன பிரச்சினை, என்ன சண்டை, பொலிஸார் வந்து விசாரித்தார்களே என்ன நடந்தது என்று கேட்பார்கள். அப்போது எனது மனசுக்கு ஒரு மாதிரியாக இருக்கும்.



# விலாசம் විලාසම



## இது பெரிய குழப்பம்

திருமதி. மலர்ச்செல்வி - அதிபர்
ப/ஆகரதென்ன தமிழ் வித்தியாலயம் - பசறை



மே மாதத்தில் ஒரு தபால் ஊழியர் வந்து ஒரு கிழமை பூராவும் ஒரு பெயரை அடையாளம் காண முடியாமல் தேடியுள்ளார். தாதியர் கல்லூரியின் பிரவேசப் பரீட்சைக்கான கடிதம் ஒன்று வந்திருந்தது. எனது ஞாபகத்தின் படி மே மாதம் 18 ஆம் திகதி தபால் ஊழியர் வந்து இந்தப் பெயர் தெரியுமா என என்னிடம் கேட்டார். அந்தப் பெயருக்குரிய நபர் எனக்குத் தெரியாது என்று நான் கூறிவிட்டேன். அவர்கள் திருமணமாகி அண்மையில் தான் இந்தத் தோட்டத்தில் குடிபுகுந்துள்ளனர். தோட்டத்திற்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதன் காரணமாக அவருடைய பெயரை நான் அறிந்திருக்கவில்லை. எனவே குறிப்பிட்ட நபரை தேடிப்பார்ப்போம் என நான் கூறினேன். அந்த நேரத்தில் எனது பாடசாலையில் ஒரு பாஸ் வேலை செய்து கொண்டிருந்தார். அவருடன் சென்று தபால் ஊழியர் சென்று கதைக்கும் போது அவர் பின்வருமாறு பதில் கூறியுள்ளார். “தாதியர் கல்லூரியின் பிரவேசப் பரீட்சைக்கு ஒரு கடிதம் வந்தால் எங்களிடம் தாருங்கள். அது எனது மனைவிக்குரியது” எழுந்தமானமாக அந்த தபால் ஊழியர் பாஸ் உடன் கதைக்க நேர்ந்ததால் கடிதத்திற்குரியவரைக் கண்டுபிடித்தார்.

பின்னர் அந்தக் கடிதத்தை பாஸ் கையெழுத்து வாங்குவதற்காக என்னிடமே கொண்டு வந்து காட்டினார். எப்போது பரீட்சை என்று தெரியாது, என்று அவர் சொன்னார். நான் கடிதத்தை பிரித்துப் பார்த்த போது நேரம் 11.30 நல்ல காலம் ஞாயிற்றுக்கிழமை தான் பரீட்சை இடம்பெற உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனவே உடனடியாக பாஸ் அவர்களின் மனைவியை அழைத்து பிரவேசச் சீட்டில் அவருடைய கையொப்பத்தை வாங்கி எனது கையொப்பத்தையும் இட்டுக் கொடுத்தேன். இப்படியான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வெளிநாடுகளிலிருந்து வரும் கடிதங்களும் பலருக்கு ஒரே பெயர் இருப்பதால் உரியவரிடம் சேராமல் இன்னுமொருவரிடம் போய் சேரும் சந்தர்ப்பங்களும் நிறைய உண்டு. அப்படியான கடிதங்கள் என்னிடமும் வந்து சேரும். அப்படியான கடிதங்களுக்கு உரியவரைத் தேடி அவர்களிடம் ஒப்படைத்த சந்தர்ப்பங்கள் பல உண்டு.

எனது பெயருள்ள இன்னுமொரு பிள்ளை இருக்கிறது. அது எனது மாணவி. அந்தப் பிள்ளையின் பெயருள்ள கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது. அது எனக்குரியது என்று நினைத்து நான் உடைத்தேன். அக்கடிதம் தங்கச் சாமான்களை ஈடு வைத்த ஒரு கடிதம். நான் அறிந்தபடியால் அக்கடிதத்தை உரியவருக்கு அனுப்பினேன்.

எனவே, எமது பிள்ளைகள் படித்து முன்னுக்கு வரும் காலத்தில் அவர்களுக்கு நல்ல இடம் கிடைக்க வேண்டுமானால், கட்டாயமாக அவர்களுக்கு ஒரு விலாசம் தேவை. பல்கலைக் கழகத்திற்குச் சென்ற ஒரு பிள்ளைக்கு தன்னுடைய விலாசம் தோட்டம் என்று சொல்லும் போது வெட்கம் ஏற்படுகிறது. மற்ற பிள்ளைகள் தமது வீட்டு இலக்கத்தையும் தெருவையும் முறையாகச் சொல்லும் போது, இந்தப் பிள்ளைகள் தமது விலாசம் வெறுமனே தோட்டத்தில் என்று சொல்லும் போது அவர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றார்கள். அது அவர்களுக்குள்ள பெரும் குறைபாடாகும். அவர்களுக்கு உரிமைகள் உண்டு. இந்த நாட்டில் பிறந்த எல்லோருக்கும் உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. அதேபோல கட்டாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமை விலாசமாகும்.




# அடையாளம் காண்பதன் பிரச்சினைகள்

ஆர்.எம். சிரிசேன
கிராம அலுவலர் - பசறை



ஒரு சான்றிதழை எழுத முற்படும் போது லயன் காம்பராக்களின் விபரங்களைக் கேட்பேன். இப்போதுள்ள பிள்ளைகள் அதை அறியமாட்டார்கள். முன்னர் அவற்றிற்கு இலக்கங்கள் இருந்தன. பிற்காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வேறு நிறுவனங்கள் வந்து புதிய கட்டிடங்களை கட்டினார்கள். அப்படி புதிய கட்டிடங்களை அமைத்த பின்னர் அவற்றிற்கு இலக்கமிடப்படவில்லை. ஆரம்பத்தில் அமைத்த லயன் காம்பராக்களுக்கு இலக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. முதலாம் இலக்க லயம், இரண்டாம் இலக்க லயம், மூன்றாம் இலக்க லயம் என அவை அடையாளப்படுத்தப்பட்டன. அதே நேரம் புதிதாகக் கட்டியமைத்த லயன் காம்பராக்களும் உண்டு. பல காம்பராக்கள் இருக்கும் கட்டிடங்களுக்கு இலக்கங்கள் போடப்படவில்லை. எனவே அவர்கள் ஏடீபீ குவாட்டஸ் என்று சொல்வார்கள். சுமார் 25 ஏடீபீ குவாட்டஸ் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் நாங்கள் எந்த ஏடீபீ குவாட்டசை அடையாளம் காண்பது வாக்காளர் டாப்புக்களை நிரப்பும் போது நாம் வீடு வீடாகச் சென்று அந்த வீட்டிலுள்ள 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களை பதிவு செய்வோம்.

இப்போது குறிப்பிட்ட நபர் எங்கிருக்கிறார் என எனக்குத் தெரியும். அவருடைய பிள்ளை ஒன்று சான்றிதழ் பெற வந்தால் அல்லது வாகன அனுமதிப் பத்திரம் பெற வந்தால், நீங்கள் யார் என நான் கேட்பேன். அப்போது அவர் சொல்வார் நான் பழனியாண்டியின் மகன் என்று. எந்தப் பழனியாண்டி என்று நான் கேட்பேன். ஏடீபீ குவாட்டஸ் மேல் டிவிஷனிலும் இருக்கிறது. கீழ் டிவிஷனிலும் இருக்கிறது. எந்தக் குவாட்டஸ் என்று கேட்பேன். 2 பழனியாண்டிமார் இருக்கிறார்கள். இல்லையா?”



ஐயா உங்களுக்கு ஞாபகம் இல்லையா? ஒரு நாள் எங்கட வீட்டுக்கு வந்தீங்க. அந்த மரத்துக்கு அடியிலிருந்து ஒரு கடிதம் எழுதினீங்க” அப்போது தான் எனக்கு ஞாபகம் வந்தது. எனவே, இப்படியான சங்கடங்களை எதிர்நோக்குகிறோம்.




# பங்காளனாக விரும்புகின்றேன்

எம்.ஏ. காதர் - தவிசாளர்
பிரதேச சபை - பசறை



அமைச்சுக்கள், வர்த்தமானிகளை வெளியிடும் போது உள்ளூராட்சி நிறுவனங்களும் தொடர்புகொள்கின்றன. பிரதேச சபையின் முன்மொழிவுகளை அங்கீகரித்து அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். உள்ளூ ராட்சி நிறுவனங்கள் ஊடாகவே இது நடைபெறுகிறது. விசேடமாக நாமும் பங்களிப்புச் செய்ய விரும்புகிறோம். நாம் பெயர் குறிப்பிடும் போது அவசியமான சபைகளிலிருந்து நிதியைக் கோருவோம். இதற்காக நாம் அனேகமாக பங்களிப்புச் செய்கிறோம். நானும் எமது சபையிலிருந்து ஒரு குறிப்பிட்ட பணத்தொகையை வழங்கத் தயார்.






# பொருளாதாரத்தின் பிரதான பங்காளர்கள்

நடேசன் சுரேஷ் - ஊவ சக்தி நிறுவனம்



இது பற்றிக் கூறுவதாக இருந்தால் இலங்கையில் பல்வேறு விதமான மனித அபிவிருத்தி பற்றிப் பேசப்படுகிறது. குறிப்பாக மனித உரிமைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால், மனிதனுடைய அடையாளம் பற்றிய ஒரு வேலைத்திட்டத்தை அமுல்படுத்த எம்மால் முடியவில்லை. சுமார் 100 வருடங்கள் பழமையான குடியிருப்புக்களில் வாழும் இம்மக்கள் அவர்கள் அடையாளம் கண்ட ஒரு சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சி செய்கிறார்கள்.

சகல வீடுகளுக்கும் லயன் காம்பராக்கல் என்ற சொல்லை கைவிட்டு அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு, மற்றவர்கள் மதிக்கக்கூடிய வகையில் அவர்கள் வாழும் வீட்டிற்கு ஒரு பெயர், ஓர் இலக்கம், அதே போல மரியாதைக்குரிய விலாசம் அவர்களுடைய வீட்டிற்கு கிடைப்பதாக இருந்தால், எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். எனவே, இதன் மூலம் அவர்களுடைய அடையாளத்தை கௌரவமாக பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நாம் செயற்படுத்தினோம்.

அதே சமயம் விலாசங்களை வழங்கும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் குறிப்பாக பிரதேச அரசியல் துறையினரும், பிரதேச அரச சேவையும் வழங்கும் சேவைகளையும் மேற்படி நிறுவனங்களுடன் சிறந்த உறவையும் கட்டியெழுப்புவதில் குறிப்பாக பொலிஸார், தபால் அலுவலகம், தோட்ட அதிகாரிகள், கிராம அலுவலர்கள், சிவில் அமைப்புக்கள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து இந்நிகழ்ச்சியை செயற்படுத்த வேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தோட்டத் துறையில் ஒரு மாற்றம் ஏற்பட்டு இம்மக்களின் கௌரவம், நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டு பெரும்பான்மை மக்களுடன் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் வாழ வழி வகுக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.



# விலாசம் විලාසම



## மிக்க மகிழ்ச்சி

வேலாயுதம் பத்மநாதன் (கிராம முதல்வர்)
18/C/A, பிலானி வத்த பிரதான வீதி,
கோனகெலே தோட்டம், பசறை



இந்தத் தோட்டத்தில் நாம் பல பரம்பரைகளாக வாழ்கின்றோம். கிராம முதல்வராகவும் கங்காணி வேலையும் செய்யும் நான் பொது சேவைகளிலும் சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறேன். பிலானித் தோட்டத்தில் வாழ்வோருக்கு நிரந்தர விலாசத்தை அமைத்துக் கொடுப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். இது வரை பிலானித் தோட்டத்திற்கு வரும் கடிதங்கள் முதலில் காரியாலயத்தில் வந்து சேரும். அக் கடிதங்களைப் பின்னர் கள உத்தியோகத்தர்கள் பரிசீலனை செய்து உரியவர்களிடம் ஒப்படைப்பார்கள். ஆனால் சில சந்தர்ப்பங்களில் கடிதங்கள் தவறுதலாக கைமாறவும் இடமுண்டு

தொடர்ந்தும் பிலானி தோட்டத்திற்கு வரும் கடிதங்கள். பிலானித் தோட்ட டிவிஷன் என முகவரி இட்டே வருகின்றன. பல கஷ்டங்களுக்கு மத்தியிலேயே இக்கடிதங்கள் சரியான நேரத்தில் சரியான நபரைச் சென்றடையும். ஊவ சக்தி நிறுவனம் பிலானித் தோட்டத்திற்கு விலாசங்களை அமைத்துக்கொடுப்பது பற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த விலாசங்கள் எமக்குக் கிடைப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மக்கள் மத்தியில் பிணக்குகள் ஏற்படாத வகையில் விலாசத்தைப் பரிசீலனை செய்து தபால்காரர் கடிதங்களை பட்டுவாடா செய்ய முடியும்.

## நிவாரணம்

கே. வேணுகோபால்



நாம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எமக்கு ஒரு விலாசத்தைக் கொடுக்க முடியுமானால் அது பிரதேச சபை அல்லது நீங்கள் எமக்குச் செய்யும் நிவாரணமாகும். அதன் மூலம் பல வேலைகளை நாம் செய்ய முடியும்.

நாம் தோட்டத்தின் மூலம் வீடுகளுக்கு இலக்கங்களை வழங்கியுள்ளோம். ஆனால் அவை பதிவுசெய்யப்படவில்லை. இதற்கு முன்னர் இந்நிலமை தான் காணப்பட்டது, ஆனால் இப்போது சற்று வேறுபாடு அடைந்துள்ளது. வீட்டு மட்டத்தில் கடிதம் விநியோகிக்கப்படுவதனால் அதில் மாற்றம் ஏற்படும். ஆனால் வீடுகளுக்கு இலக்கம் வழங்கப்படாமையால் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும். வீடுகளுக்கு இலக்கம் இருந்தால் நல்லது.



# விலாசம்
# විලාසම

## பயனுறுதிவாய்ந்தது



இதற்கு முன்னர் தோட்டத்தில் உரிய முறையில் தபால் விநியோகிக்கப்படவில்லை. சில சமயங்களில் பெரட்டுவில் கணக்கப்பிள்ளை கள உத்தியோகத்தர் ஆகியோர் உரியவர்களுக்கு கடிதத்தை வழங்குவார்கள். அது நான்கு ஐந்து நாட்களுக்குப் பிறகும் நடக்கும். சில வேளைகளில் உரியவரிடம் கடிதம் போய் சேரமாட்டாது. இப்போது நமுனுகொல எமது டிவிஷன் என்ற காரணத்தினால் எமது தோட்டத்தின் சகபாடிகள் கடிதங்களை பட்டுவாடா செய்வதன் காரணமாக இப்பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது. ஆனால் தனியார் ஒருவரை நியமித்தால் முகவரிகளை அறியாத காரணத்தினால் பல பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு.

கிராமத்து சமூகத் தலைவர்கள் உடனும் இளைஞர்களுடனும் கலந்துரையாடி இந்த விடயத்தை அமுல்படுத்துவதாக இருந்தால் நல்ல ஒத்துழைப்பு கிடைக்கும். இது மிகவும் முக்கியமான விடயம் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இது உரிய முறையில் செயற்படுத்தப்படுமானால் எதிர்கால சந்ததியினருக்கு இது மிகவும் பயனுறுதிவாய்ந்த செயற்பாடாக அமையும். ஒரு முகவரி இருத்தல் தனிப்பட்ட முறையிலும் சமூகம் என்ற வகையிலும் கௌரவத்திற்குரிய ஒரு விடயமாகும்.

முன்னொரு போது மாட்டுப்பட்டி லயன் காம்பராக்களே எமக்கு இருந்தன. கோவில் லயன், மேட்டு லயன், என்ற பெயரில் லயன்களுக்கு இலக்கங்கள் தரப்பட்டுள்ளன. இது நல்ல விஷயம். குறிப்பாக லயன்களுக்குப் பதிலாக தனி வீடுகளும் இப்போது அமைக்கப்பட்டுள்ளன. இது சமூகத்தின் மதிப்பை மேம்படுத்தும் ஒரு விடயம்.

## உறவினர்களுக்கும் வசதியாக இருக்கும்

கமலேஷ்வரி



வங்கி நடவடிக்கைகள், பாடசாலை நடவடிக்கைகள், பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்தல் என்பன மிகப் பிரயோசனமான விடயங்கள். இதற்கு முன்னர் தோட்ட நிர்வாகமே இவற்றையும் கவனித்து வந்தது. பிரச்சினைகள் இருக்கின்றன. எனது விலாசம் கோனுகொல்ல குரூப், லோவர் டிவிஷன் பசறை. தோட்டம் எனக்கு வழங்கிய இலக்கம் 10. எமக்கு ஒரு இலக்கம் கிடைப்பதாக இருந்தால் அது நல்லது.

எமக்கு சரியான விலாசம் கிடைத்தால் தூரப் பிரதேசங்களில் உள்ள எமது உறவினர்களும் நண்பர்களும் இலேசாக எம்மைத் தேடி வருவார்கள்.

# மக்கள் வாழ்வின் சுபீட்சத்திற்கு

ஜீ. வசந்தன்
பிரதி அதிபர்



பாடசாலைக்கு ஒரு தபால் பெட்டி கிடைப்பது பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் அல்லாது பிரதேசத்தின் மக்களுக்குக் கிடைத்த உன்னதமான ஒரு சந்தர்ப்பமாகும். பெற்றோர் ஒரு பிள்ளையை அனுப்பி தனது கடிதங்களை பாடசாலைத் தபால் பெட்டியில் போட முடியும். தபால் அலுவலகத்தின் ஊழியர் தினசரி குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து கடிதங்களை எடுத்துச் செல்வார். இதனால் கடிதப் போக்குவரத்து வினைத்திறனுடன் செயற்படும் என நம்புகிறேன். இதன் மூலம் மக்கள் வாழ்வு சுபீட்சமடையும் என சந்தேகத்திற்கிடமின்றி நான் கூறுவேன்.





**சீ. ராஜலட்சுமி**
4/1, பூமரத்துப் புரம்,
கீழ் டிவிஷன், பசறை

இப்போது எமக்கு ஒரு விலாசம் இருக்கிறது. அது குறித்து மகிழ்ச்சி

**செல்லத்துறை செயமலர்**
B 4/1, பூமரத்துப் புரம்,

எமக்குப் புதிய வாழ்வு பற்றி சிந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தது

**சீதாலட்சுமி**
பூமரத்துப் புரம்,

சரியான தபால் சேவை இல்லாத படியால் ETF, EPS பெறுவதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளன. இது பாரிய பிரச்சினையாக இருந்தது. இப்பிரச்சினையைத் தீர்த்துத் தந்தமை குறித்து மகிழ்ச்சி




**எஸ். ப்ரியா - மாணவி**

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்கள் பிரிவினரின் நான்காம் தலைமுறையினர் நாம். இவ்வளவு ஆண்டுகள் கடந்த போதிலும் மனிதர்கள் என்ற வகையில் நாம் மதிக்கப்படவில்லை. நாம் ஓரங்கட்டப்பட்ட ஒரு சமூகமாக வாழ்ந்தோம். இதன் காரணமாக பல பரம்பரையாக எமது இனத்தவர் மிகத் துன்பத்தோடு வாழ்ந்தனர். இந்த வேதனையை உணர்ந்த ஒரு சிலர் முன்வந்து எமக்கு விலாசத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளனர். எமக்கு நிரந்தரமான ஒரு விலாசம் வழங்கப்பட்டதோடு எமது பாடசாலைக்கும் ஒரு தபால் பெட்டி கிடைத்துள்ளது.

கணேஷமூர்த்தியின் பல்கலைக்கழக அனுமதியை இழக்க நேர்ந்தது. உரிய நேரத்தில் பல்கலைக்கழகத்திலிருந்து வந்த கடிதம் கிடைக்காமையே அதற்குக் காரணம். தோட்டத்தில் வாழ்ந்த அவருக்கு நிரந்தரமான விலாசம் இருக்கவில்லை.

# இராசலிங்கம் கணேஷமூர்த்தியின் அடையாளத்தை இழக்க நேரிட்டமை



இராசலிங்கம் கணேஷமூர்த்தி, ஓர் ஆசிரியர். அவருடைய தந்தை ஒரு தமிழர். தாய் சிங்களவர். கணேஷமூர்த்தி தோட்ட லயத்திலே பிறந்தார். மொனராகலை. விபுலசேகர பாடசாலையில் அடிப்படைக் கல்வியைக் கற்ற அவர். க.பொ.த உயர்தர வகுப்பில் கற்பதற்கு பசறை தமிழ் வித்தியாலயத்தில் 2002 ஆம் ஆண்டில் இணைந்துகொண்டார். தமிழ் மொழி, இந்து கலாசாரம். அரச அறிவியல் ஆகிய பாடங்களை தனது ஊரில் கற்க வசதி இல்லாதபடியால் அவர் பசறை தமிழ் வித்தியாலயத்தில் தனது உயர் கல்வியை ஆரம்பித்தார். மிகத் தூரப் பிரதேசத்தில் இருந்து குறிப்பிட்ட நேரத்திற்கு பாடசாலையை அடைய முடியாத காரணத்தினால் பாடசாலை அதிபரின் தயவு காரணமாக கணேஷமூர்த்தி உட்பட மேலும் ஒரு சில மாணவர்களுக்கு பாடசாலைக் கட்டிடத்திலேய ஒரு சிறு அறை இலவசமாக வழங்கப்பட்டது. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களுக்கும் அவர் A-B-C என்ற சித்திகளைப் பெற்றார்.

தன்னுடன் கற்ற மற்றுமொரு மாணவர் B-B-C சித்திகளைப் பெற்ற போதிலும் அவருக்குப் பல்கலைக் கழக அனுமதி கிடைத்தது. கணேஷமூர்த்திக்கு பல்கலைக் கழகப் பிரவேசம் கிட்டவில்லை. தோட்ட லயம் கணேஷமூர்த்தியின் நிரந்தர குடியிருப்பாக அமைந்த காரணத்தினாலும் அதற்கு உரிய விலாசமில்லாததாலும் அவருக்கு பல்கலைக்கழக பிரவேசம் கிட்டவில்லை. கணேஷமூர்த்திக்குரிய பல்கலைக்கழகக் கடிதம் உரிய நேரத்தில் கிடைக்காமையால் இந்த பாதிப்பு ஏற்பட்டது.

அவர்களுடைய வாழ்க்கை மிகவும் துன்பகரமானது. குடும்பத்தின் மூத்தவர் என்ற வகையில் தங்கை தம்பிமாரின் எதிர்காலத்தையிட்டும் கணேஷமூர்த்தி கவனிக்க வேண்டியிருந்தது.

"கொழும்பு கேசர் வீதியில் அமைந்த ஒரு கடையில் சில காலம் வேலை செய்தேன். எனது நண்பர்கள் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்றனர். நான் பல தொழில்களைச் செய்தேன். இக்கால கட்டத்தில் ஊவா மாகாண சபை ஆசிரியர் பதவிகளுக்கான வெற்றிடங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. நான் விண்ணப்பித்தேன். அதற்கமைய எனக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது. நான் வெளிவாரிப் பட்டதாரியாகவும் சித்தியடைந்துள்ளேன்"

கணேஷமூர்த்தி தான் எதிர்நோக்கிய துன்பியல் நிகழ்வு காரணமாக அதிர்ச்சியடையவில்லை. வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர்நீச்சல் செய்துள்ளார்.

"நான் முகம்கொடுத்த அதே விதியை எதிர்நோக்கிய மேலும் பலர் இருக்கின்றனர். நேர்காணலுக்குக் கிடைத்த கடிதம் கிடைக்காமையால் தொழில்பெற பலரால் முடியவில்லை. வங்கியிலிருந்து கிடைத்த கடிதங்கள் உரிய நேரத்தில் கிடைக்காமையால் சிலருடைய தங்க நகைகள் ஈட்டில் பறி போயின. பரீட்சைப் பிரவேசப் பத்திரங்கள் உரிய நேரத்தில் கிடைக்காமையால் பல பரீட்சார்த்திகளால் பரீட்சை எழுத முடியவில்லை. பலருக்கு சேமலாப நிதி உரிய நேரத்தில் கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தோட்ட மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களே." என்று கணேஷமூர்த்தி கூறுகிறார்.

எந்தவொரு கட்டிடம் ஆயினும் அதற்கு ஒரு நிர்வாக இலக்கமும் முகவரியும் இருப்பது உலகம் அங்கீகரித்த ஒரு கொள்கையாகும். கட்டிடத்தில் வசிப்பவர்களின் நிரந்தர குடியிருப்பு இந்த விலாசத்தின் மூலமே உறுதிப்படுத்தப்படுகிறது. தோட்டத் தொழிலாளர்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரஜைகளுக்கும் இந்த உரிமை இருக்கின்றது. மனித அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளும் ஊடக நிறுவனங்கள் இவ்விடயத்தை முழுமையாக புறக்கணித்துள்ளன.

இந்நாட்டு மக்களில் 7 வீதமானோர் தோட்டங்களில் வாழும் தமிழ் மக்கள். ஆனால் தொடர்ந்தும் அரைகுறை அடிமைகளாகவே அவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தாம் வாழும் வீட்டிற்கு நிரந்தரமான விலாசம் இருக்க வேண்டியது அடிப்படை சிவில் உரிமையாகும். தோட்டங்களில் வாழும் மக்களுக்கு இந்த உரிமை கிடையாது.

தோட்ட மக்களைப் பொறுத்தவரையில் தாம் வாழும் லயன் காம்பராக்களின் விலாசமே அவர்களுக்கு உண்டு. வீதிகளின் பெயருக்குப் பதிலாக தோட்டத்தின் பெயர் கீழ் டிவிசனா மேல் டிவிசனா என்பது அவர்களுடைய முகவரியாக உள்ளது. இந்த டிவிஷன்கள் மிகப் பாரிய நிலப்பரப்பைக் கொண்டவை

தோட்டத்து மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் தலைவர்களும் இது விடயமாக பேசா மடந்தைகளாக இருக்கின்றனர்.

நிரந்தரமான விலாசத்தைப் பெறுவதும், வீதிகளுக்கான பெயர்ப்பலகைகளைத் தயாரிப்பதும் வீட்டு முகவரி அச்சிடப்பட்ட கடதாசி அட்டைகளை சுவர்களில் ஒட்டுவதும் தோட்டங்களில் வாழும் மக்களின் மகிழ்ச்சிக்கு உரிய விடயமாக அமைந்துள்ளன. இந்த நடவடிக்கைகளில் அவர்கள் உற்சாகமாக ஈடுபட்டனர். இந்தச் சந்தர்ப்பம் அனைத்துத் தோட்டப்புறங்களில் வாழும் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பது அவர்களுடைய அபிலாசையாகும்.